# அன்றைய தாருந்நத்வா
# இன்றைய ஜமாஅத்துல் உலமா!

அபூ சுவூது

முஹம்மது(ஸல்) அவர்கள் பிறப்பதற்குச் சுமார் 140 ஆண்டுகளுக்கு முன் அரேபியாவில் தாருந்நத்வா என்ற பேரறிஞர்கள் சபை ஒன்று உருவானது. அதில் அரபி எழுத, படிக்கத் தெரிந்தவர்கள் மட்டும் உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். மத, மார்க்க, ஆன்மீக விஷயங்களில் இவர்கள் எடுக்கும் முடிவே முடிவானது. அனைவரும் கண்மூடி பின்பற்றி வாழவேண்டியது. இச்சபையின் தீர்ப்புக்கு எதிராக எவர் கூறினாலும், அவர் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார். கொடுமை படுத்தப்பட்டார். ஏதாவது ஒரு பொருளால் ஒருவருக்கு செல்வம் கொழித்தது என்றால் அப்பொருளைக் கடவுளாக, உருவச் சிலையாக வடித்துக் கஃபத்துல்லாஹ்வில் வைக்கும் உரிமை இத்தாருந் நத்வாவிற்கு இருந்தது. தாருந் நத்வா மூலமே இதனைச் செயலாக்க முடியும். இந் நத்வா நபி(ஸல்) அவர்களது காலத்தில் மிக மும்முரமாக அம்ர் (அபுல் ஹிக்கம் - அறிவின் தந்தை என மக்களால் போற்றப்பட்டவனும், அபூஜஹீல் அறியாமையின் தந்தை என நபி(ஸல்) அவர்களால் அழைக்கப்பட்டவன்) என்பவரைத் தலைவராகக் கொண்டு இயங்கிக் கொண்டிருந்தது.

எழுதப், படிக்கத் தெரியாத நபி(ஸல்) அவர்கள் அல்லாஹுவால் திருத் தூதராக்கப்பட்டு அதனை மக்களுக்கு எடுத்துரைத்தபோது பேரறிஞர்கள் நாங்களிருக்க அல்லாஹ் நபியாக அனுப்ப ஒரு உம்மி (படிப்பறிவற்றவர்)தானா கிடைத்தார் என ஏளனக் குரல் எழுப்பியவர்களும் இவர்களே! இதை, அறிஞர்கள் சபை சொல்வது அனைத்தும் உண்மையே எனக் கண்மூடிப் பின்பற்றி வந்தனர். அன்றைய காட்டரபிகள் அவர்களது கூற்றை வேதவாக்காக, தேவ நோக்காகக்

கொண்டிருந்தனர். எனவே நபி(ஸல்) அவர்களது அறிவுரை களைக் கேட்க மறுத்தனர்.

இப்படித் தங்களை மார்க்க அறிஞர்களாகப் பறைசாற்றிய அன்றைய தாருந் நத்வாவிற்கும் இன்றைய ஜமாஅத்துல் உலமாவிற்குமுள்ள ஒற்றுமையைப் பாரீர்க

| தாருந் நத்வா | ஜமாஅத்துல் உலமா |
|---|---|
| 1. **தகுதிகள்**: குறைந்தது அரபி எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | 1. **தகுதிகள்**: அரபி மதரஸாக் களில் (ஸ் , கல்லூரி களில் அல்ல) ஏழு ஆண் டுகள் கழித்திருக்க வேண்டும். |
| 2. நாவன்மை, கவிபாடும் திறமை கொண்டவர்கள் சிறப்பு அம்சம் பெறுவர். | 2. பேச்சாற்றல், அரபி மத்ரஸாக்களின் முதல்வர் கள் சிறப்பு அம்சம் பெறுவர். |
| 3. அங்கத்தினராக 40வயது தலைவராக 60 வயது | 3. அங்கத்தினராக அரபி மதரஸா ஸனது; தலை வராக மவ்லவீகளின் செல்வாக்கு, அதிகப்பட் டங்கள் (அரபி மதரஸாக் களால் கொடுக்கப்பட்டவை). |
| 4. கல்வி, ஞானம், புலமை அடிப்படையில் ஒரு சிலருக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டது. | 4. ஏழு ஆண்டுக் கழிப்பில் 5 அல்லது ஆறு ஆண்டுகள் மட்டும் கழித்திருப்பவர் களுக்கு விதி விலக்கு. |
| 5. எல்லா நபிமார்களும் பரப்பிய தவ்ஹீதைப் பரப்பிய நபி(ஸல்) அவர் களுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கினர். | 5. அந்த நபி(ஸல்) காட்டிய வழியில் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் தவ்ஹீது பேசுவோருக்கும், அதனைப் பரப்பும் இதழுக்கும் எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். |

6. தன்னிடமிருந்த சிறந்த புலவர்களைக் கொண்டு நபி(ஸல்) அவர்களையும், அவர்கள் பரப்பிய தீனுல் இஸ்லாத்தையும் வசைபாட வைத்தனர்.

7. நபி(ஸல்) அவர்கள் சொல்வதைக் கேட்காதீர்கள்; முஸ்லிம்கள் ஓதும் குர்ஆனைக் கேட்காதீர்கள்; காதில் பஞ்சை வைத்து அடைத்துக் கொள்ளுங்கள்; கேட்டால் வழிதவறி விடுவீர்கள் என்றார்கள்.

8. முன்னோர்கள் வழியில் நாம் வாழ்வதை விட்டு விடாதீர்கள்; முன்னோர்கள், மூததையர் வழியே நம் வழி. பல கடவுள் கொள்கையே நமது கொள்கை என்றனர்.

9. அதற்கான ஆதாரங்கள் கொடுக்கப்படவுமில்லை! பாமர காட்டரபிகள் ஆதாரம் கேட்கவுமில்லை. இவர்களை மார்க்க அறிஞர்கள் எனக் கண்மூடிப் பின்பற்றினர்.

6. தன்னிடமுள்ள பன்னூலாசிரியர்களையும் அறிவுச் சுரங்கங்களையும் கொண்டு தவ்ஹீதுக் கொள்கை பரப்புபவர்களுக்கு எதிராக வசைபாட வைக்கின்றனர்.

7. நபி(ஸல்), அவர்களது உம்மத்தினருக்கு ஏவியிருப்பதற்கொப்பக் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் அழைப்புப்பணி செய்வதைக் கேட்காதீர்கள், இதழைப் படிக்காதீர்கள்; வழி தவறி விடுவீர்கள் என்கின்றனர்.

8. நமது நாதாக்கள், முன்னோர்கள் காட்டிய வழியே செல்லுங்கள்; அதுவே நல்வழி; பலவழி (மத்ஹப்) கொள்கையே நமது கொள்கை என்கின்றனர்.

9. இவர்களது கூற்று, இவர்கள் கூறும் நாதாக்களின் சொல்லிலிருந்தும் ஆதாரமில்லை; மாறாக அந்நாதாக்கள் கூறியிருப்பதை முழுமையாகப் பார்த்துக் கூறுவதுமில்லை. இவர்களது கூற்றை முஸ்லிம்கள்கண் மூடிப் பின்பற்றக் கோருகின்றனர்.

| | |
|---|---|
| 10. தாங்களெல்லாம் பேரறிஞர்கள், மற்றவர்கள் படிப்பறிவற்றவர்கள்- பாமரர்கள் எனப் பிரித்து வைத்திருந்தனர். மார்க்கத்தைச் சடங்கு சம்பிரதாயமாக வியாபாரம் செய்தனர். | 10. மௌலவீ பட்டம் பெற்ற தாங்களெல்லாம் ஆலிம்கள், மற்றவர்கள் அவாம்கள் (பாமரர்கள்) எனப் பிரித்து வைத்து, மார்க்கத்தை வியாபாரம் செய்கின்றனர். |
| 11. இவர்களது கூற்றை கண்மூடிப் பின்பற்றாதவர்களுக்கு, ஏற்காதவர்களுக்கு துன்பம் செய்தனர்; ஊரை விட்டு ஒதுக்கி வைத்தனர். | 11. இவர்களது கூற்றைக் கேட்காதவர்களை ஜமாஅத்தை விட்டு ஒதுக்கி வைக்கவும், அல்லாஹ்வின் பள்ளியில் நுழைய விடக்கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றிப் பள்ளிக்குப் பள்ளி அனுப்பி வைக்கின்றனர். |
| 12. மார்க்கத்தைப் போதிக்க, முடிவெடுக்க எங்களுக்கு மட்டுமே உரிமையுண்டு, வேறு எவருக்கும் உரிமையில்லையென வாதிட்டனர். | 12. இவர்களும், மவ்லவீகளான நாங்கள் கூறுவதே உண்மையான இஸ்லாம். மவ்லவீயல்லாதவர்கள் மார்க்கத்தைப் பற்றி பேசவோ, போதிக்கவோ அருகதையற்றவர்கள் என வாதிடுகிறார்கள். |
| 13. இந்நத்வாவின் உதவியால் பல ஷிர்க்குகள், அனாச்சாரங்கள் உருவாகின. அதற்கு இது உறுதுணையாயிருந்தது. ஏன்? ஏகத்துவத்தைப் போதித்த இப்றாஹீம்(அலை) | 13. இதன் உதவியால் இன்று மௌலூது, ராத்திபு, தர்ஹா, பாத்திஹா சடங்கு போன்ற அனாச்சாரங்களும், பைஅத், முரீது, தரீக்கா போன்ற இஸ்லாத்தில் |

| | |
|---|---|
| அவர்களுக்கே கஃபாவில் சிலை வைக்கப்பட்டது. | இடம் பெறாதவைகளும் இஸ்லாத்தின் பெயரால் உருவாகியுள்ளன. மக்களின் மனநிலைக்கொப்ப மார்க்கத் தீர்ப்புகளை வழங்கி இவற்றிற்கு உறுதுணையாயுள்ளது. |
| 14. பல அனாச்சாரங்களுக்கு விழாவெடுத்துக் கொண்டாடினார்கள். | 14. **“அவ்லியாவின் சிறப்பு தர்ஹாவின் பயன்கள்”** வலிமார்கள் மாநாடு எனப் பெரும் விழாவெடுத்துக் கொண்டாடுகிறார்கள். |
| 15. இவர்களது கொள்கைக்கு மாற்றமாகச் சொல்பவர்களை அடிக்கவும், உதைக்கவும், கலவரத்தை உண்டு பண்ணவும் மக்களைத் தூண்டி விட்டனர். நபி(ஸல்) அவர்களுக்குத் தாயிஃப் நகரில் நிகழ்ந்தது நல்ல எடுத்துக்காட்டாகும். | 15. இவர்களது கூற்றுக்கு மாற்றமாகப் பேசுபவர்களின் பயானை ஜமாஅத்துடன் சென்று தடுத்து நிறுத்துங்கள்; பேசுவோரை, பேசச் செய்வோரை அடித்து, மிரட்டி வையுங்கள் எனத் தீர்மானங்கள் இயற்றினர். திருச்சி தஞ்சாவூர் ரோடு பள்ளியில் கத்தியைக் காட்டி மிரட்டியிருப்பது, ஓர் உதாரணம். |
| 16. தூய இஸ்லாம் முழு ஒளியுடன் ஒளிர்ந்த போது இவர்கள் இருந்த இடம் தெரியாமலாகி விட்டனர். | 16. மக்கள் சுயமாக தூய இஸ்லாத்தை நபி(ஸல்) கூறியபடி, குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஆராய முனைவார்களேயானால் இவர்களும் இருந்த இடம் தெரியாமல் போவார்கள் என்பது திண்ணம். |

| | |
|---|---|
| 17. அபூசுபியான், அபூலஹபு, அபூஜஹ்ல் போன்ற சமூதாய அந்தஸ்துப் பெற்றவர்கள் இதில் இடம் பெற்றனர். தவ்ஹீதுக்கு எதிராகத் தலைமை தாங்கினர். | 17. இன்று இந்தச் சபையின் மூலமாகப் பல மூதறிஞர்கள் அறிவிற் சிறந்த மேதைகள், அறிவின்சுரங்கங்கள், சமுதாயத்தலைவர்கள் என அழைக்கப்பட்டுச் சமுதாயத்தில் சிறப்பு அம்சம் பெறுபவர்கள் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலான தவ்ஹீதை எதிர்ப்பதில் தலைமை தாங்குகிறார்கள். |
| 18. இஸ்லாம் முதலில் அறிமுகமற்ற பாமரர்களிடமே வளர்ந்தது. அந்தஸ்துள்ளவர்களும், செல்வர்களும், இதற்கு எதிராகத் தூண்டிவிடப்பட்டனர். | 18. இப்போதும் பாமரர்களே விளங்கிச் செயல்படத் தொடங்கியுள்ளனர். அதனால் செல்வர்களையும், பள்ளி முத்தவல்லிகளையும் தூண்டி விட்டுள்ளனர். |

சகோதரர்களே! சகோதரிகளே!

நபி(ஸல்) அவர்கள் தீனுல் இஸ்லாத்தை முழுமையாகத் தூய்மையாகக் கொடுக்க முற்பட்டபோது பேரறிஞர்கள் எனக்கருதப்பட்ட தாருந் நத்வாயைப் போலவே, இன்றைக்கு நாம் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் தூய இஸ்லாத்தைக் காட்ட முயற்சி செய்யும்போது தற்சமய ஜமாஅத்துல் உலமா நடப்பதைக் காணலாம். கொடிய துன்பங்கள் வந்தபோது **“இது என் உம்மத்தாருக்கு ஒரு ஆறுதலாக இருக்கட்டும்”** என நபி(ஸல்) அவர்கள் கூறியதை நினைவில் கொண்டு, விடாமல் நமது பணியைத் தொடர்வோமாக.

எல்லாத் துன்ப இழப்புக்களையும், எதிர்ப்பையும் எதிர்த்து நிற்கும் தவ்பீக்கை அல்லாஹ் தந்தருள்வானாக. பொறுமையைக் கொண்ட நல்ல முஸ்லிம்களாக ஆக்கிவைப்பானாக. ஆமீன்.

ஆதாரங்கள் : ஜமாஅத்துல் உலமா திருச்சியில் நடத்திய 1987 மார்ச் 14,15 தேதி மாநாட்டின் ஒலிநாடாச் செய்திகள், முடிவுகள், தாருந் நத்வா, இப்னு ஹிஷாம்.